**கவனிக்க.-** 2010.07.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1663 - 2010 ජූලි මස 16 වැනි සිකුරාදා - 2010.07.16

1663 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1312 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1312 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1313 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி–வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

இல. : டீஆர்எப்/21/ஆர்ஈசீரீ/3010.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக கப்ரின் பத்திரகே மஞ்சுள காரியவசம், ஆர்எஸ்பீ, கவீப (உ/62086)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2009, திசெம்பர் 17.

7 -444

இல. : டீஆர்எப்/21/ஆர்ஈசீரீ/2999.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றப்படுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக கப்ரின் பாரமுல்லகே தொன் தனஞ்ஜய பண்டார, மிநிரெ (உ/65852)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2009, நவெம்பர் 27.

7 -445

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**யாத்திரிகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 175)**

கெட்டபாருவ இரஜமஹா விகாரையின் வருடாந்த எசெல திருவிழா - 2010

மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல பிரதேச செயலாளர் பிரிவின் புராதன கெட்டபாருவ இரஜமஹா விகாரையின் எசெல திருவிழா 2010, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி முதல் செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதை யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் (175 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம்) 1988, மாச்சு 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட 500 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் "பகுதி I : தொகுதி (I) - பொது" இல் பிரசுரிக்கப்பட்ட விதியின் கீழ் இத்தால் அறிவிக்கிறேன்.

டீ. ஏ. ஏகநாயக,
பிரதேச செயலாளர்,
கொட்டபொல.

கொட்டபொல பிரதேச செயலகம்,
2010, யூன் 29.

7-510

---

**திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் - 2010**

திருக்கோவில் செயலகப் பகுதி அம்பாறை மாவட்டம்

மேற்குறிப்பிடப்பட்ட ஆலய உற்சவம் 2010 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23 ஆந் திகதி ஆரம்பித்து 2010 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 09 ஆந் திகதி தீர்த்தோற்சவத்துடன் பூர்த்தியடையும் என்பதை யாத்திரிகர்களுக்கும் இவ் உற்சவத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1951 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி வெளியிடப்பட்ட 10247 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் யாவற்றினையும் யாத்திரிகர்களுக்கும் இவ் உற்சவத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் கவனத்திற்கு எடுக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றீர்கள்.

இவ்வுற்சவத்தின் முகாம் பின்வருமாறு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு : கோவில் வீதி, திருக்கோவில்
கிழக்கு : திருக்கோவில் கடற்றொழில் வீதி, திருக்கோவில்
தெற்கு : கடற்கரை வீதி, திருக்கோவில்
மேற்கு : பிரதான வீதி, திருக்கோவில்

பிரதேச செயலாளர்,
திருக்கோவில்.

7-440

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பிரதேச அபிவிருத்தி வங்கி – கம்புறுபிட்டிய கிளை

(முன்னர் றுஹுண அபிவிருத்தி வங்கி என அறிமுகம் செய்யப்பட்ட)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின் கீழ் றுஹுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்*

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதிக்குரிய அதி விஷேட அரச வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கிக்கு சாட்டப்பட்ட அதிகாரத்தின் படி, 2009.11.05 ஆந் திகதியில் நடாத்தப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை கூட்டத்திலே கீழக்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

''றுஹுண அபிவிருத்தி வங்கியின் பிரசித்தி பெற்ற சட்டத்தரணியும் நொத்தாரிசு திருமதி ஊரபொல நரசிங்ஹகே சந்த்ரலதா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.08.02 ஆந் திகதிக்குரிய இல. 1845 என்ற ஈட்டுபத்திரத்தின் கீழ், அறவிடப்பட வேண்டிய பணம் செலுத்தல், கம்புறுபிட்டிய லேனபடுவ, பண்டரவத்த, இல. 27ஈ, என்ற முகவரியில் வசிக்கும் தும்பேகமகே பிரதீப் அவர்களினால் செலுத்தாது விடப்பட்டதாலும் அவ்வீட்டுப்பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்த ஐம்பத்து நான்காயிரம் ரூபா (ரூ. 1,54,000) பணம் றுஹுண அபிவிருத்தி வங்கிக்கு செலுத்த வேண்டி இருப்பதாகவும், 2006.10.19 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 20.5% ஒரு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் ரூபா (ரூ. 1,54,000) பணத்துக்காக ஏலவிற்பனை திகதி வரை வட்டியுடன் ஏலவிற்பனை செலவும் சேர்த்து வேறு ஏதாவது பணம் கிடைக்க இருப்பின் அவற்றைக் குறைத்துக் கொண்டும், அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளரான திரு ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 1845 என்ற ஈட்டுப்பத்திரத்தின் கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது.''

### ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், கங்கபடபத்துவையில் கரகொட உயன்கொடயில் அமைந்துள்ள ஹி. பி. 229351 இல் 229353 என்ற பண்டரஹேன எனும் ஒன்றிணைக்கப்பட்ட காணியின் இல. 01 என்ற துண்டை பிரித்து வேறக்கப்பட்ட ''1சீ 1'' என்ற துண்டை சீ. எஸ். ஜயவர்தன எனும் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரினால் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட இல. 4561 உம் 26.09.1995 ஆந் திகதிக்குரிய வரைபடத்தின் பிரகாரம் இல. 17 என்ற துண்டின் எல்லைகளாக - வடக்கே : அவ் இலக்கம் 4561 என்ற வரைபடத்திற்கிணங்க இல. 14 என்ற துண்டும் இல.16 என்ற துண்டு பிரவேசிக்கக்கூடிய வழியாகவும் ; கிழக்கே : இல. 16 என்ற துண்டும் (பிரவேசிக்கக்கூடிய வழியாக) ; தெற்கே : லேனபடுவயிலிருந்து கரகொடக்கு செல்லும் பாதையும் ; மேற்கே : அவ் இல. 4561 என்ற வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இல. 13 என்ற துண்டும் எல்லையாகக் கொண்ட இதில் பதினைந்து தசம் ஏழு ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.77பே.) மிகப் பெரிய காணியில் மரங்கள், பழவர்க்கங்கள் உட்பட அனைத்தும் ஆகும்.

இக்காணி சீ 470-294 இல் பதியப்பட்டுள்ளது.

இக்காணியின் பிரவேசிக்கும் வழி கிழக்கே அமைந்துள்ளது.

இக்காணி மாத்தறை காணிப் பதிவு அலுவலகத்தில் 2006.08.04 ஆந் திகதி, சீ 665/02/நிலை 38/39 இல் பதியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,

அமரசேன பிரதாபசிங்ஹ,
பொது முகாமையாளர்.

பிரதேச அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.

7-363

---

## இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன

வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''பிலபிட்டியவைச் சேர்ந்த வர்ணசூரிய பட்டபன்டிகே சந்திரசேன என்பவர், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எம். ஜிவ்ரி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, சனவரி 27 ஆந் திகதிய 3790 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும், 2010, பெப்புருவரி 28 ஆந் திகதியன்றுள்ளவாறாக இருபத்தேழு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து அறுநூற்று அறுபது ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 27,86,660.89) கொண்ட தொகையும் 2010, மாச்சு 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு சத வீத (26%) வட்டியும் சொல்லப்பட்ட முறி மீது சொல்லப்பட்ட வர்ணசூரிய பட்டபன்டிகே சந்திரசேன என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதான பாதையுரிமையையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இருபத்தேழு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து அறுநூற்று அறுபது ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 27,86,660.89) கொண்ட தொகையை 2010, மாச்சு 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு சத வீத (26%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 3790 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதான பாதையுரிமையையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**3790 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்திலுள்ள யட்டிநுவரவின் கங்கபலாத்த கோறளையில் யட்டிநுவரவின் பிரதேச சபை எல்லைகளினுள் பிலபிட்டியவில் அமைந்துள்ளதும் அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் யட்டிஹின்னவேவத்த ஹேன மெதலெஸ்ஸ எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரீ. பி. அத்தநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1989, திசெம்பர் 27 ஆந் திகதிய 1590 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : யூ. ஜீ. ஜயசிங்கவினால் உரிமை கோரப்பட்ட காணி ; கிழக்கில்: பெரு வீதி; தெற்கில் : டிங்கிரி எட்டனவினால் உரிமைகோரப்பட்ட காணி ; மற்றும் மேற்கில் : கிரகமத் தோட்டம், பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 1590 ஆம் இலக்க வரைபடத்தின்படி முப்பத்தைந்து தசம் எட்டு ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 35.85பே.) கொண்டுள்ளதுடன், கண்டிக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

லக்ஷ்மன் சில்வா,
பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

7-438

---

**மக்கள் வங்கி - கொட்டாஞ்சேனை கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2009, யூலை 31 ஆந் திகதி நடைபெற்ற அதன்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''டொன் பிரியந்த பத்திரன மற்றும் பெலிகே நிரோஷா பிரியதர்ஷனி இருவரும் மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. தீப்தி ஆர். மென்டிஸ் அத்தாட்சிப்படுத்திய 16.12.2008 ஆந் திகதி கொண்ட 3613 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால், இப்பொழுது மேற்படி 3613 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மூன்று இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூபா 3,93,333.34) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் மேற்படி மூன்று இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூபா 3,93,333.34), மூன்று இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூபா 3,93,333.34) பணத்தொகையின் மீது 28.01.2009 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு சதவீதப்படி (26%) மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக 16.12.2008 ஆந் திகதி கொண்ட 3613 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் எஸ். ராமநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமெ மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

மேல் மாகாணம். கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்று அக்குறுமுல்லயில் அமைந்துள்ளதும் "தெமட்டகஹாவத்த" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். ஜே. லியனகே தயாரித்த 2008, யூலை 03 ஆந் திகதிகொண்ட 11183 ஆம் இலக்க வரைபடத்தில் "துண்டு 02" என அடையாளமிடப்படடு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி "துண்டு 02" என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : மேற்படி வரைபடத்திலுள்ள துண்டு 1 மற்றும் துண்டு 3 (10 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்டது) ; கிழக்கில் : எச். எம். முனசிங்க உரிமைகோரும் காணி ;தெற்கில் : டி. அல்பர்ட் உரிமைகோரும் காணி ; மேற்கில் : அனோமா ஜாகனகியும் ஏனையோரும் உரிமைகோரும் காணி மற்றும் 10 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்ட காணி என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு தினொன்று தசம் மூன்று எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றா. 11.38பே.) இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 871/183 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி 11183 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட "துண்டு 3" என்பதன் மீதும் அதன் வழியாகவும் வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சிரேஷ்ட முகாமையாளர்,
(கொழும்பு வடக்கு).

மக்கள் வங்கி,
வலயத் தலைமை அலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

7-484

---

**மக்கள் வங்கி - மல்வத்தை வீதி**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

வொயெஜர் லீசிங் இன்டர்நெஷனல் பிறைவேட் லிமிட்டெட்

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2009, ஏப்பிறல் 24 ஆந் திகதி நடைபெற்ற அதன்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எச். பீ. எம். குணரத்ன அத்தாட்சிப்படுத்திய 05.06.2007 ஆந் திகதி கொண்ட 883 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது. ஆதலால், இப்பொழுது மேற்படி 883 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது ஏழு இலட்சத்த முப்பத்துமூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூபா 7,33,333.44), பதினைந்து இலட்சம் ரூபா (ரூ. 15,00,000) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் அப்பணத் தொகையையும் முறையே ஏழு இலட்சத்த முப்பத்துமூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூபா 7,33,333.44), பதினைந்து இலட்சம் ரூபா (ரூ. 15,00,000) 29.11.2008 ஆம், 07.11.2008 ஆந் திகதிகளிலிருந்து விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்துமூன்று வீதப்படி (23%) மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஔ (29L) என்னும் பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலதான பணங்களையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்படடிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக கொழும்பைச் சேர்ந்த பிரசிதத நொத்தாரிசு எச். பீ. எம். குணரத்ன அத்தாட்சிப்படுத்திய 05.06.2007 ஆந் திகதி கொண்ட 883 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருமதி ஈ. எஸ். ராமநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கம்பஹா காணிப்பதிவகப் பிரிவிற்குட்பட்ட அளுத்குறு கோறளை, தாசிய பற்று தொம்பவல கிராமத்தில் அமைந்துள்ளதும் "துணுமடலகஹாலந்த" என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். எவ். எஸ். வீரசிங்க தயாரித்த 08.09. 2004 ஆந் திகதி கொண்ட 2496 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு "A" என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் இதற்கு எல்லைகளாக - வடக்கில் : ஹெட்டியாராச்சிகே விமலதாச உரிமைகோரும் காணி ; கிழக்கில் : ரணதுங்க ஜயசேகர, கோறளலாகே டிலானி ரணதுங்க ஆகியோர் உரிமைகோரும் காணி மற்றும் நிமல் கோறளேயாராச்சி உரிமைகோரும் காணி; தெற்கில் : நிமல் கோறளேயாராச்சி உரிமைகோரும் காணி ; மேற்கில் : பிரதேச சபை வீதி என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு இரண்டு றூட் பன்னிரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றா. 12பே.) அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து.

(இக்காணி கம்பஹா காணிப் பதிவகத்தில் A 337/118 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(மேற்கு வலயம் 01).

மக்கள் வங்கி,
வலயத் தலைமை அலுவலகம் (மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

7-485

### மக்கள் வங்கி - தொகுதி வங்கித் தொழிற் பிரிவு

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் 2008, ஒற்றோபர் 24 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"இன்டர்லொக் பெஷன் பிபிலே (பிறைவேட்) லிமிட்டெட் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஞானா ஏக்கநாயக அத்தாட்சிப்படுத்திய 14.12.1999 ஆந் திகதி கொண்ட 3075 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது. ஆதலால், இருபத்திரண்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஏழு ரூபா பத்து சதம் (ரூபா 22,66,697.10) இப்பொழுது மேற்படி முறிகளின் மீது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது.

ஆதலால் இருபத்திரண்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஏழு ரூபா பத்து சதம் (ரூபா 22,66,697.10), பதினெட்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தெட்டு ரூபா ஆறு சதம் (ரூபா 18,92,958.06) 2008, பெப்புருரி 08 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்தொன்று தசம் ஐந்து சதவீதப்படி (21.5%) மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் "29ஔ" (29L) என்னும் பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலதான பணத்தையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 3075 ஆம் இலக்க ஈட்டு முறியினால் மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமெ மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

#### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், பிபிலே பிரதேசச் செயலாளர் பிரிவில் பிபிலே சிறு பிரிவு, வேகம கிராமத்தில் அமைந்துள்ளதும் மனன்கெரெல்ல என அழைக்கப்படுவதுமான காணியில் அரசாங்க நிலஅளவையாளர் ஆர். எம். எஸ். பண்டார தயாரித்த 17.08.1998 ஆந் திகதி கொண்ட GAM 572 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 360 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் மீதான குத்தகை உரிமைகள் முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பொருத்தப்பட்டுள்ள பொறித்தொகுதிகள், பயிர்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 360 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : GAM 572 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டுகள் 327 மற்றும் 256 ; கிழக்கில் : GAM 572 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டுகள் 256 மற்றும் 361 ; தெற்கில் : GAM 572 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டுகள் 361 மற்றும் 252 ; மேற்கில் : இதே வரைபடத்திலுள்ள துண்டுகள் 252 மற்றும் 327 என்பன அமைந்துள்ளன. மேற்படி GAM 572 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு சைபர் தசம் ஐந்து நாலு மூன்று ஹெக்டேயர் (0.543 ஹெக்.) இது மொனராகலை காணிப் பதிவகத்தில் K 63/216 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சிரேஷ்ட முகாமையாளர்,
(வாடிக்கையாளர் தொடர்புகள் - 3).

மக்கள் வங்கி,
தொகுதி வங்கித் தொழிற்பிரிவு,
35, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

7-486

---

### மக்கள் வங்கி

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 31.07.2009 ஆந் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"யாழ்ப்பாண பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003.11.05 ஆந் திகதிய 4064 ஆம் இலக்கம் கொண்டதும் மற்றும் 23.12.2005 ஆந் திகதி கொண்ட இலக்கம் 5696 ஈட்டு முறிகளின் பிரகாரம் மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய வருமதிக் கொடுப்பனவில் திரு. கந்தையா சசிகரன், சின்னப்பு கந்தையா, கமலேஸ்வரி கந்தையா ஆகியோர் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டு முறிகளின் கீழ் தற்போது நான்கு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து ஐநூற்று தொண்ணூறு ரூபா தொண்ணூற்று மூன்று சதம் (ரூபா 4,29,590.93) பணத்தொகையை ஈட்டு முறி இல. 4064 பிரகாரமும், பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டு ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூ. 12,96,978.34) ஈடு முறி இலக்கம் 5696 பிரகாரம் மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இத் தருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேற்குறிப்பிடப்பட்ட ஈட்டுமுறி இலக்கங்களான 4061 உம் 5696 உம் 5696 ஐயும் கீழ் வங்கிக்கு ஈடுசெலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் கார்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டிய நான்கு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து ஐநூற்று தொண்ணூறு ரூபா

தொண்ணூற்று மூன்று சதம் (ரூபா 4,29,590.93) 25.08.2006 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை இருபது தசம் இரண்டு ஐந்து வீதம் (20.25% வருடாந்த வட்டியையும் மற்றும் பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டு ரூபா முப்பத்து நான்கு சதம் (ரூ. 12,96,978.34) 22.07.2006 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை (22.5%) வீத வருடாந்த வட்டியையும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அதைத் தவிர்த்து மக்கள் வங்கிச் சட்டம் 29எல் பிரகாரம் அறவிடப்படும் அத்துடன் ஏனைய வரவு தொகைகளையும் அறவிடவேண்டும் என்பதை தீர்மானம் செய்துள்ளது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவில்பற்று அராலி தெற்கு இறை ''பிளக்க வெட்டியான்'' என்றழைக்கப்படும் உறுதியின் படி நிலப்பரப்பு 2 உம் 0.67 குளி. வ. செ. விஸ்தீரணம் கொண்டது. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். நிர்மலேந்தின் 24 ஆந் திகதி மே மாதம் 2002 இல் தயாரித்துள்ள இலக்கம் 40 வரைபடத்தில் துண்டு 1 எனக் சுட்டப்பட்டதில் நிலபரப்பு 2 உம், 5.738 குளி வ. செ. விஸ்தீரணம் உள்ளதுக்குள் வரும் வீடும், கிணறும், செய்பயிர், வான்பயிர் அங்குள்ள அதற்குச் சேர்ந்தவைகளும் இங்கு சொல்லப்பட்ட நிலப்பரப்பு 2 உம் 5.738 விஸ்தீரணம் கொண்டதுக்கும் எல்லைகளாவன - வடக்கு : ரோட்; கிழக்கு : நடராஜா பெண் பூமலர்க்குரிய ஆதனம் ; தெறகு : கந்தசாமி பெண் கனகம்மாவிற்குரிய ஆதனமும் கணேசலிங்கம் பெண் பத்மாதேவிக்குமுரிய ஆதனம் ; மேற்கு : இராமு பொன்னுத்துரைக்கும் மற்றும் கந்தையா பாஸ்கரனுக்குமுரிய ஆதனம்.

(இவை யாவும் யாழ்ப்பாணம் காணிப் பதிவு அலுவலகத்தில் E 690/209 இல் 10.11.2003 ஆந் திகதியிலும், E690/233 இல் 02.01.2006 ஆந் திகதியிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்.
மக்கள் வங்கி - வட பிராந்தியம்.

7-488

---

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 29.08.2008 ஆந் திகதீ மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''யாழ் பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, பெப்புருவரி 14 ஆந் திகதிய 4224 ஆம் இலக்கம் கொண்ட மற்றும் 10.04.2005 ஆந் திகதி கொண்ட இலக்கம் 5041 ஈட்டுமுறிகளின் பிரகாரம் மக்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய வருமதிக் கொடுப்பனவில் திரு. இராசலிங்கம் சிறீராம் மற்றும் மகாலக்சுமி சிறீராம் அல்லது மகாலெட்சுமி சிறீராம் ஆகியோர் தவணை தவறியுள்ளமையாலும குறிப்பிட்ட ஈட்டு முறிகளின் கீழ் எட்டு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து நாநூற்று நாற்பத்து நான்கு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூபா 8,64,444.75) மட்டும் பணத்தொகையை ஈட்டு முறியிலக்கம் 4224 இன் பிரகாரமும், பத்து இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து நாநூற்று எண்பத்து மூன்று ரூபா பதினேழு சதம் (ரூபா 10,33,483.17) பணத்தொகையை, ஈட்டு முறி இலக்கம் 5041 இன் பிரகாரமும் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்கள் கீழ் இவ்வருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஈட்டு முறி இலக்கம் 4224 மற்றும் 5041 கீழ் வங்கிக்கு ஈடுசெலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டிய எட்டு இலட்சத்து அறுபத்துரண்டாயிரத்து நாநூற்று நாற்பத்து நான்கு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூபா 8,62,444.75) அத்துடன் எட்டு இலட்சத்து இருபத்தேழாயிரத்து ஐநூறு ரூபா (ரூபா 8,27,500) 01.05.2007 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை 20.25% வருடாந்த வட்டியையும் மற்றும் பத்து இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து நாநூற்று எண்பத்து மூன்று ரூபா பதினேழு சதம் (ரூபா 10,33,483.17) அத்துடன் பத்து இலட்சத்து ஐநூறு ரூபா மட்டும் (ரூ. 10,00,500) க்கும் 2007.04.07 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை 20.25% வீதம் வருடாந்த வட்டியையும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அவை தவிர்ந்த மக்கள் வங்கி சட்டம் 29'L' பிரகாரம் அறவிடப்படும் ஏனைய வரவு தொகைகளையும் அறவிடவேண்டும் என்பதைத் தீர்மானம் செய்துள்ளது.

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி, சங்கானைப் பிரிவு தொல்புரம் இறை- ''வளக்கம்புறெய்'' என அழைக்கப்படும் நிலப்பரப்பு 3 வ. செ 17.4 குளி விஸ்தீரணம், உறுதியின் படி கொண்டது. ஆனால் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். இராமச்சந்திரன் 9.11.2003 ஆந் திகதியிட்டு தயாரித்த வரைபடம் இலக்கம் 3099 ல் துண்டு 1 இல் இருந்து 4 வரை நில. பர. 3 வ. செ. 16.33 குளியுடன் கட்டிடமும், பயிர் வகைகளும், இதன் தென்மேற்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் அரைப்பங்கும் துறவையும் அதற்குரிய வழிவாய்க்காலும் சேர்ந்ததுமாகும். சொல்லப்பட்ட 3 பரப்பு 16.33 குளி விஸ்தீரணம் கொண்டுள்ள ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : ரோட்; கிழக்கு : சுப்பிரமணியம் ஆறுமுகநாதனின் ஆதனம் ; தெற்கு : முத்துக்குமாரு சுப்பிரமணியத்தின் ஆதனம் ; மேற்கு: தங்கம்மா பெண் இராமேஸ்வரனின் ஆதனமும் இவையனைத்தும் யாழ்ப்பாணம் காணிப் பதிவு அலுவலகத்தில் கே 736/219 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(வடக்கு வலயம்).

மக்கள் வங்கி,
நுவரேலியா.

7-489

## வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி (பீஎல்சீ)

[பதிவு இல. PQ 118]

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி (பதிவு இல. PQ 118) பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

சேமஸ் டுவல் வேதநாயகம்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் [பதிவு இல. PQ 118] பணிப்பாளர்கள் சபையால் 2009,மே 29 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"நுகேகொடை, பாகொடை வீதி, 23/28 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சேமஸ் டுவல் வேதநாயகம் (இதனகத்துப்பின்னர் "ஈடுவைத்தவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். ஜே. செவந்த்த பீரிஸ் அத்தாட்சிப்படுத்திய 2006, ஒற்றோபர் 27 ஆந் திகதிகொண்ட 2341 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது (இதனகத்துபின்னர் "முறி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 1,) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் சார்பில் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்,

சொல்லப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன் வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 26.02.2008 ஆந் திகதியன்றுள்ளவாறு ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து எழுநூற்று எழுபது ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 9,99,770.84) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ள தலாலும்,

சொல்லப்பட்ட ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து எழுநூற்று எழுபது ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 9,99,770.84) 26.02.2008 ஆந் திகதியன்றுள்ளவாறு வீடமைப்புக் கடன் மீது நிலுவையிலுள்ள முதல் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா(ரூ. 9,50,000) 27.02.2008 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 19.80% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச் சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் பொரலஸ்கமுவ ட்ரையட் ஆக்ஷனியர்ஸ் திரு. என்.டீ. டீ. பி. சேனநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் அளுத்குறு கோறளை, பல்லே பற்று ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குட் பட்ட பிட்டிபனவில் அமைந்துள்ளதும் பல்சல்வத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பி. ஐ. அபேகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 26.05.1996 ஆந் திகதிகொண்ட 4565 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 3 என்பதற்கு எல்லைகளாக – வடக்கில் : துண்டு 2 ; கிழக்கில் : டபிள்யூ. ஏ. சுனிலின் ஹல்கஹாதெனியகும்புற ; தெற்கில்: கே. ஞானவதியின் காணி ; மேற்கில் : துண்டு 4 என்பன அமைந் துள்ளன. மேற்படி 4565 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஏழு தசம் எட்டு ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 7.86பே.). இது தொகுதி/பக்கம் G 1107/215 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பி. ஐ. அபேகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 26.05.1996 ஆந் திகதி கொண்ட 4565 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 4 என அடையாளமிடப் பட்ட காணியிலும் வழியாகவும் அதன் கீழும் அதன் மேலும் அதன் மீது இதனையொத்த உரிமைகள் கொண்ட ஏனையோருடன் பொதுவாகப் பயன்படுத்துவதற்கு வழியுரிமையையும் ஏனைய உரிமைகளையும் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

7-496

---

## மக்கள் வங்கி

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 30.05.2008 ஆந் திகதி நடைபெற்ற மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"யாழ்ப்பாண பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.10.19 ஆந் திகதி கொண்ட இல. 4668 கொண்ட ஈட்டு முறியின் பிரகாரம் வங்கிக்கு செலுத்த வேண்டிய வருமதி கொடுப்பனவில் திரு. பொன்னையா தவராசா, திருமதி தவராசா மதிவதனா தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது பதினொரு இலட்சத்து அறுபத்தையாயிரத்து அறுநூற்று தொண்ணூறு ரூபா ஏழு சதம் (ரூபா 11,65,690.07) பணத்தொகையை ஈட்டு முறி இல. 4668 பிரகாரம், தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961

ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்கள் கீழ் இவ்வருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஈட்டு முறி இலக்கம் 4668 இன் கீழ் வங்கிக்கு ஈடுசெலுத்தப்பட்ட ஆதனம் யாழ்ப்பாணம் உத்தரவுபெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டிய சொல்லப்பட்ட தொகை பதினொரு இலட்சத்து அறுபத்தையாயிரத்து அறுநூற்றி தொண்ணூறு ரூபா ஏழு சதம் (ரூபா 11,65,690.07), பதினொரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்று பதினேழு ரூபா தொண்ணூற்று ஆறு சதம் (ரூபா 11,56,817.96) 2006.12.13 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை 20.25 வீதம் வருடாந்த வட்டியும், ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அவை தவிர்த்து மக்கள் வங்கிச் சட்ட "29எல்" பிரகாரம் அறவிடப்படும் ஏனைய வரவுத் தொகைகளையும் அறவிட வேண்டும் என்பதை தீர்மானம் செய்துள்ளது.

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. வடமாகாணம், யாழ் மாவட்டம், வண்ணார்ப்பண்ணை பரிஷ் வண்ணார்ப்பண்ணை மேற்கு "வெள்ளைச் சூரித்தரை" நிலம் குழி 15.5/8 உறுதியின்படி ஆனால் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். நிர்மலேந்திரன் 2004.09.18 ஆந்திகதி வரையப்பட்ட இல. 398 இன் பிரிவின்படி குளி 15.389 இரு மாடிக்கட்டிடம், கிணறு, பயிரிட்டவை, குறிப்பிட்ட குளி 15.389 எல்லை கிழக்கு : கந்தப்பிள்ளை சிற்றம்பலம் ஆதனம் ; வடக்கு : செல்லத்துரை பெண் தெய்வானைப் பிள்ளை ஆதனம்; மேற்கு : சிவன்பண்ணை வீதியும் கிருஷ்ணன் பெண் ராஜலட்சுமியின் ஆதனம் ; தெற்கு : முத்தையா குணரத்தினத்தின் ஆதனம் இலக்கம் டி 639/82 இன் கீழ் யாழ்ப்பாண காணி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(வடக்கு வலயம்).

மக்கள் வங்கி,
சங்கானைக் கிளை

7-491

---

## மக்கள் வங்கி

### 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 30.05.2008 ஆந் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"யாழ்ப்பாண பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.06.25 ஆந் திகதி கொண்ட இல. 5258 கொண்ட ஈட்டு முறியின் பிரகாரம் வங்கிக்கு செலுத்த வேண்டிய வருமதி கொடுப்பனவில் திரு. பொன்னையா சற்குணமும், திருமதி சற்குணம் சரோஜாவும் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது பதினேழு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து நாற்பத்தெட்டு ரூபா (ரூபா 17,99,948.00) பணத்தொகையை ஈட்டு முறி இல. 5258 பிரகாரம், தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ்வருமதிக் கொடுப்பனவு களை அறவிடுவதற்காக மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஈட்டு முறி இலக்கம் 5258 இன் கீழ் வங்கிக்கு ஈடுசெலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணம் உத்தரவுபெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டிய சொல்லப்பட்ட தொகை பதினேழு இலடச்த்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து நாற்பத்தெட்டு ரூபா (ரூபா 17,99,948.00), பதினேழு இலட்சத்து தொணணூற்று ஒன்பதாயிரத்து தொளாயிரத்து தொண்ணூறு ரூபா (ரூபா 17,99,990.00) 2006.10.17 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை 20.25% வீதம் வருடாந்த வட்டியும், ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அவை தவிர்த்து மக்கள் வங்கிச் சட்ட "29எல்" பிரகாரம் அறவிடப்படும் ஏனைய வரவுத் தொகைகளையும் அறவிட வேண்டும் என்பதை தீர்மானம் செய்துள்ளது.

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. வடமாகாணம், யாழ் மாவட்டம், வலிகாமம் மேற்கு பிரிவு, சங்கானைப் பரிஷ், சங்கானை மேற்கு இறை "வெள்ளுருவன் கூடல்" நிலப்பரப்பு 2 வ. க. உறுதியின்படி ஆனால் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். நிர்மலேந்திரன் 2004.06.20 ஆந் திகதி வரையப்பட்ட இல. 4017A படத்தின் படி பிரிவு 1 இல் பரப்பு 2 வ. க. குளி 06.750 உடன் வீடு கிணறுடன் அங்குள்ள அனுபந்தங்களுடன் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 2 வ. க. குளி 06.759 இன் எல்லை கிழக்கு: கலைவாணி சிறுவர் இல்லமும், ஆறுமுகம் குமரேசனின் ஆதனமும்; வடக்கு : ஒழுங்கை ; மேற்கு : ஒழுங்கை ; தெற்கு : கிருஷ்ணராசா பெண் மங்கையற்கரசியின் ஆதனம் இலக்கம் ஈ 575/187 இன் கீழ் யாழ்ப்பாண அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(வடக்கு வலயம்).

மக்கள் வங்கி,
சங்கானை கிளை.

7-490

---

## மக்கள் வங்கி - தொகுதி வங்கித் தொழிற் பிரிவு

### 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2010.01.22 ஆந் திகதி நடைபெற்ற அதன்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டதும் இல. 262, கங்காராம வீதி, தும்போவில, பிலியந்தலை என்னும் முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையுடையதுமான ஒரு கம்பனியாகிய எம். சாம்சன் சில்வா அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் (PV 3809) மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஐ. டீ. எச். எல். பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2006, ஏப்பிறல் 07 ஆந் திகதி கொண்ட 858 ஆம் இலக்க ஈட்டு முறி, 2006, ஏப்பிறல் 07 ஆந் திகதி கொண்ட 859 ஆம் இலக்க ஈட்டு முறி என்பன மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது. ஆதலால், இவற்றின் மூலம் இல. 262, கங்காராம வீதி, தும்போவில, பிலியந்தலை என்னும் முகவரியைச் சேர்ந்த எம். சாம்சன் சில்வா அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் இதற்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் அட்டவணைகளில் நன்கு விவரிக்கப்படும் ஆதனத்தை 858 ஆம், 859 ஆம் இலக்க ஈட்டு முறிகளினால் மக்கள் வங்கியின் சார்பில் ஈடுவைத்துள்ளது. ஆதலாலும் மேற்படி முறிகளின் மீது ஒன்பது இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து எழுபது அமெரிக்க டொலர் தொண்ணூற்று ஏழு சதம் (அமெரிக்க டொலர் 9,51.070.97) மற்றும் பதினான்கு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நூற்று முப்பத்திரண்டு அமெரிக்க டொலர் எழுபத்து நான்கு சதம் (ரூ. 14,90,132.74) அவற்றின் மீதான வட்டியுடன் சேர்து இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியு முள்ளது. ஆதலால் மேற்படி ஒன்பது இலட்சத்து ஐம்பத் தோராயிரத்து எழுபது அமெரிக்க டொலர் தொண்ணூற்று ஏழு சதம் (அமெரிக்க டொலர் 9,51.070.97), பதினான்கு இலட்சத்து தொண்ணூறாயிரத்து நூற்று முப்பத்திரண்டு அமெரிக்க டொலர் எழுபத்து நான்கு சதம் (அமெரிக்க டொலர் 14,90,132.74) ஏழு இலட்சத்து அறுபத்துநான்காயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்பது அமெரிக்க டொலர் எண்பது சதம் (அமெரிக்க டொலர் 7,64,899.80) பன்னிரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஒன்பது அமெரிக்க டொலர் ஐம்பத்துமூன்று சதம் (அமெரிக்க டொலர் 12,40,799.53) 08.12.2009 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை மூன்று மாதங்களுக்கு மேல் ஆண்டொன்றுக்கு LIBOR ஐந்து சதவீதப்படி (5%) மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 858 ஆம், 859 ஆம் இலக்க ஈட்டு முறிகளினால் மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த ஏலதாரர் திருமதி ஈ. எஸ். ராமநாயகவினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக் கின்றது."

**முதலாம் அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அதிகாரி பற்று, கொலன்னாவை பிரதேச சபை மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட முல்லேரியாவில் அமைந்துள்ளதும் முல்லேரியாவ மானசீக ரோஹல இடம என அழைக்கப்படுவதுமான காணியில் நிலஅளவையாளர் தலைமையதிபதி தயாரித்த 12/1-9 (66/9/3) என்ற வெளிக்களத் தாளில் இல. கே. ஓ. 7314 என்னும் முதனிலை வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டுள்ள காணித் துண்டின் குத்தகை உரிமைகள் அனைத்தையும் அதன் மீதான கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 1 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : வீதி; கிழக்கிலும் தெற்கிலும் : முல்லேரியாவ மனநோயாளர் மருத்துவ மனை ; மேற்கில் : பிரதான வீதி மற்றும் அகழி என்பன அமைந்துள்ளன. மேற்படி இல. கே. ஓ. 7314 கொண்ட முதனிலை வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒன்று தசம் சைவர் சைவர் சைவர் ஆறு ஹெக்டேயர் (1.0006ஹெக்.) இது கொழும்பு காணிப் பதிவகத்தில் B 869/224 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணித்துண்டு அண்மைய நிலஅளவையின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:-

மேற்படி முல்லேரியாவில் அமைந்துள்ளதும் முல்லேரியாவ மானசீக ரோஹல இடம என அழைக்கப்படுவதுமான காணியில் நிலஅளவையாளர் தலைமையதிபதியின் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட இல. L/CO/ 145 கொண்ட வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மேற்படி துண்டு 1 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : வீதி; கிழக்கிலும் தெற்கிலும் : முல்லேரியாவ மனநோயாளர் மருத்துவமனை ; மேற்கில் : பிரதான வீதி மற்றும் அகழி என்பன அமைந்துள்ளன. மேற்படி இல. L/CO/145 கொண்ட வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒன்று தசம் சைவர் சைவர் சைவர் ஆறு ஹெக்டேயர் (1.0006ஹெக்.) அல்லது (2ஏ. 1றூ. 35.44பே.).

**இரண்டாம் அட்டவணை**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று மாம்பே/கெஸ்பேவ கிராம சபையின் தற்பொழுது கொழும்பு மாவட்ட அபிவிருத்திச் சபை எல்லைகளுக்குட்பட்ட தும்போவிலயில் அமைந்துள்ளதும், கங்காராம வீதி 262 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் படல்கேவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. எல். டீ. சில்வா தயாரித்த 17.11.1957 ஆந் திகதி கொண்ட 2985 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு A என்பதற்கு எல்லைகளாவக - வடக்கில் : படகுத் துறையிலிருந்து ஹொரணை வீதிக்குச் செல்லும் பாதை இப்பொழுது கங்காராம வீதி என அழைக்கப்படும் வீதி; கிழக்கில் : துண்டு B என அடையாளமிடப்பட்ட இதே காணியின் ஒரு பகுதி; தெற்கில் : மயானம் மற்றும் வெவவத்த; மேற்கில் : தோலகஹட்டகஹாவத்த என்பன அமைந்துள்ளன. மேற்படி 2985 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு மூன்று றூட் பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 3றூ. 10பே.). இது கொழும்பு காணிப் பதிவகத்தில் M 2335/271 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணித்துண்டு அண்மைய நிலஅளவையின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:-

மேற்படி தும்போவிலயில் அமைந்துள்ளதும், கங்காராம வீதி 262 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் படல்கேவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரி. ஏ. புராஹ் தயாரித்த 13.07.1980 ஆந் திகதி கொண்ட 2341 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு A என்பதற்கு எல்லைகளாவக - வடக்கில் : கங்காராம வீதி ; கிழக்கில் : பட்டிவிலகே பிரேமதாச, கங்காணம்பத்திரகே விமலசேன, ஹெட்டிபத்திரன்னலாகே ரஞ்சித்

சௌவிரத்ன ஆகியோர் உடைமைகொண்டுள்ள துண்டு B ; தெற்கில்: தும்போவில மயானம் மற்றும் பாகொட ஆராச்சிகே டொன் ஜேம்ஸ் அப்புஹாமி உடைமைகொண்டுள்ள வெவவத்த ; மேற்கில் : ஹெட்டியாராச்சிகே பத்மா சிறிவர்தன, விக்ரமகே ஜோன் பெரேரா, தொம்பகஹாகே பிரான்சிஸ் பெரேரா ஆகியோர் உடைமை கொண்டுள்ள தோலகஹரட்டவத்தயின் பகுதிகளாகிய உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. எல். டீ. சில்வா தயாரித்த 25.10.1964 ஆந் திகதி கொண்ட 5286 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டுகள் B1, B3, B4 மற்றும விக்ரமகே அபிலின் பெரேரா, தொம்பகஹகே லயனல் பெரேரா மற்றும் ஏனையோர் உடைமை கொண்டுள்ள தோலகஹாட்டகஹாவத்தயின் பகுதிகள் என்பன அமைந்துள்ளன. மேற்படி 2341 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு மூன்று றூட் பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 3றூ. 10பே.).

2. மேற்படி தும்போவில கிராமத்தில் வெவெல படகுத்துறையிலிருந்து கொழும்பு -ஹொரணை வீதியின் பிரதான வீதியில் அமைந்துள்ளதும் படல்கேவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் கங்காராம வீதி 262/5 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ஜே. வீ. பெரேரா தயாரித்த 03.08.1974 ஆந் திகதி கொண்ட 2965 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. எல். டீ சில்வா தயாரித்த 17.11.1957 ஆந் திகதி கொண்ட 2985 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு B என்பதன் உட்பிரிவொன்று) மேற்படி துண்டு 1 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : வேவெல படகுத் துறையிலிருந்து கொழும்பு-ஹொரணை வீதிக்குச் செல்லும் பிரதான வீதி ; கிழக்கில் : துண்டு 2 ; தெற்கில் : துண்டு 3 ; மேற்கில் : கே. பவுலிஸ் பெரேராவின் இதே காணியின் துண்டு A என்பன அமைந்துள்ளன. மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இருபத்தொரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 21பே.). இது கல்கிசை காணிப் பதிவகத்தில் M 2811/153 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி தும்போவில கிராமத்தில் கங்காராம வீதியில் அமைந்துள்ளதும் படல்கேவத்த என அழைக்கப்படுவதுமான காணியின் மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் கங்காராம வீதி 262/5 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட கட்டிடங்கள் என்பவற்றுடன் சேர்த்து. (மேற்படி 2985 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு B என்பதன் உட்பிரிவொன்று). மேற்படி துண்டு 3 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டுகள் 1 மற்றும் 2 ; கிழக்கில் : துண்டு 7 (12 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்ட துண்டு) ; தெற்கில் : துண்டு 4 ; மேற்கில் : கே. பவுலிஸ் பெரேராவுக்குரிய இதே காணியின் துண்டு A என்பன அமைந்துள்ளன. மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பத்தொன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 19பே.). இது கல்கிசை காணிப்பதிவகத்தில் M 2811/154 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

4. மேற்படி தும்போவில கிராமத்தில் கங்காராம வீதிக்கு அப்பால் அமைந்துள்ளதும் படல்கேவத்த என அழைக்கப்படுவதுமான காணியின் மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் கங்காராம வீதி, 262 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட கட்டிடங்கள் என்பவற்றுடன் சேர்த்து. (மேற்படி 2985 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு B என்பதன் உட்பிரிவொன்று). மேற்படி துண்டு 4 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டுகள் 3 ; கிழக்கில் : துண்டு 7 (12 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்ட துண்டு) ; தெற்கில் : துண்டு 5 ; மேற்கில் : கே. பவுலிஸ் பெரேராவுக்குரிய இதே காணியின் துண்டு A என்பன அமைந்துள்ளன. மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இருபத்தைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 25பே.). இது கல்கிசை காணிப்பதிவகத்தில் M 2666/34 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

5. மேற்படி தும்போவில கிராமத்தில் கங்காராம வீதியில் அமைந்துள்ளதும் படல்கேவத்த என அழைக்கப்படுவதுமான காணியின் மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 5 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் கங்காராம வீதி 262/3 ஆம், 262/4 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட கட்டிடங்கள் என்பவற்றுடன் சேர்த்து. (மேற்படி 2985 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு B என்பதன் உட்பிரிவொன்று). மேற்படி துண்டு 5 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டு 4 ; கிழக்கில் : துண்டு 7 (12 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்ட துண்டு) ; தெற்கில் : துண்டு 6 ; மேற்கில் : கே. பவுலிஸ் பெரேராவுக்குரிய இதே காணியின் துண்டு A என்பன அமைந்துள்ளன. மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இருபத்தொரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 21பே.). இது கல்கிசை காணிப்பதிவகத்தில் M 2666/35 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

6. மேற்படி தும்போவில கிராமத்தில் கங்காராம வீதியில் அமைந்துள்ளதும் படல்கேவத்த என அழைக்கப்படுவதுமான காணியின் மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 6 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் என்பவற்றுடன் சேர்த்து. (மேற்படி 2985 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு B என்பதன் உட்பிரிவொன்று). மேற்படி துண்டு 6 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டுகள் 5, 7 ; கிழக்கில் : எம். டீ. சார்லிஸ் டீ கொஸ்தாவுக்குரிய காணியின் ஒரு பகுதி ; தெற்கில் : மயானம் ; மேற்கில் : கே. பவுலிஸ் பெரேராவுக்குரிய இதே காணியின் துண்டு A என்பன அமைந்துள்ளன. மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இருபத்திரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 22பே.). இது கல்கிசை காணிப்பதிவகத்தில் M 2666/262 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பின்வரும் காணித்துண்டின் மீதான வழியுரிமையுடன் சேர்த்து:-

மேற்படி தும்போவில கிராமத்தில் கங்காராம வீதியில் அமைந்துள்ளதும் படல்கேவத்த என அழைக்கப்படுவதுமான காணியின் மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 7 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (12 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்ட துண்டு) (மேற்படி 2985 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு B என்பதன் உட்பிரிவொன்று) மேற்படி துண்டு 7 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : வேவெல படகுத்துறையிலிருந்து கொழும்பு-ஹொரணை வீதிக்குச் செல்லும் பிரதான வீதி; கிழக்கில் : எம். டீ. சார்லிஸ் டீ கொஸ்தாவுக்குரிய காணியின் ஒரு பகுதி; தெற்கில் : துண்டு 6 ; மேற்கில்: துண்டுகள் 5, 4, 3, 2 என்பன அமைந்துள்ளன. மேற்படி 2965 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பன்னிரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12பே.). இது கல்கிசை காணிப்பதிவகத்தில் M 2666/34 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மூன்றாம் அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று தெஹிவளை-கல்கிசை மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட களுபோவில எஸ். டீ. எஸ். ஜயசிங்க மாவத்தையில் அமைந்துள்ளதும் பராக்கிரம அவென்யூ (இப்பொழுது எஸ். டீ. எஸ். ஜயசிங்க மாவத்தை) 40 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட அம்பகாஹாவத்த என அழைக்கப்படும் காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஆர். பொத்தேஜு தயாரித்த 10.09.1954 ஆந் திகதி கொண்ட 227 ஆம்

இலக்க வரைபடத்தில் துண்டு A3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு A3 என்பதற்கு எல்லைகளாவன - வடக்கில்: சீ. டபிள்யூ. வீரசிங்கவின் முதலியார் அவெனியூ 12 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகள் ; கிழக்கில் : திருமதி எம். பீ. பெரேராவின் பராக்கிரம அவெனியூ. 38 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகள் ; தெற்கில் : பராக்கிரம அவெனியூ; மேற்கில் : துண்டு A2 என்பன அமைந்துள்ளன. மேற்படி 227 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பதினெட்டு தசம் ஒன்று மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18.13பே.). இது கல்கிசை காணிப் பதிவகத்தில் M 3030/90 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணித்துண்டு அண்மைய நிலஅளவையொன்றின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-

மேற்படி களுபோவிலயில் அமைந்துள்ளதும் எஸ். டீ. எஸ். ஜயசிங்க மாவத்தையில் அமைந்துள்ளதும் (முன்னர் பராக்கிரம அவெனியூ) 40 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதுமான அம்பகாஹாவத்த என அழைக்கப்படும் காணியில் துண்டு A3 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு A3 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : முதலியார் அவென்யூ 12 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகள்; கிழக்கில் : எஸ். டீ. எஸ். ஜயசிங்க மாவத்தை 38 ஆம் இலக்க வளவுகள் ; தெற்கில் : எஸ். டீ. எஸ். ஜயசிங்க மாவத்தை; மேற்கில் : எஸ். டீ. எஸ். ஜயசிங்க மாவத்தை, 40A என்னும் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகள் என்பன அமைந்துள்ளன. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எல். பீ. நானாயக்கார தயாரித்த 14.08.1987 ஆந் திகதி கொண்ட 4962 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன்பரப்பளவு பதினேழு தசம் நாலு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17.45பே.).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர் (அறவீடுகள்),
தொகுதி வங்கித் தொழிற் பிரிவு.

மக்கள் வங்கி,
தொகுதி வங்கித் தொழிற்பிரிவு,
35, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

7-487

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. (பதிவு இலக்கம் PQ116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கங்கள் : 294546, 314764 மற்றும் 334705 - ஜோன் டில்சான் ரண்தெனிய ரண்தெனிய ஆராச்சிகே தோனா நிலண்க ருக்சான்தி

24.03.2009 ஆந் தேதியன்று கூடிய கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த காணியை ஈடுவைத்த ஜோன் டில்சான் ரண்தெனிய ரண்தெனிய ஆராச்சிகே தோனா நிலண்க ருக்சான்தி என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். எல். ஜி. குரேயின் 17.08.2005 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 5542 மற்றும் 7.2.2006 ஆந் திகயுடைய முறி இலக்கம் 5620 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீக்கு 10.11.2008 ஆந் திகதி வரை ரூபா 44,26,747.91 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 வது சிறப்புச் சட்டத்தின் பிரகாரம் உள்ள அதிகாரத்தின்படி மேற்படி முறி இலக்கங்கள் 5542 மற்றும் 5620 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 44,26,747.91 வுடன் 11.11.2008 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 32,50,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 32% சதவட்டியுடன் மற்றும் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 உரிமம்பெற்ற ஏலதாரர் எல்.பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

### முதலாவது அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ராகம் பத்து அலுத்குரு கோரளையில் ஜாஎல பிரதேச சபை கந்தானை உப கிளையின் பட்டகம தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள இலக்கம் 207/2 கம்புவாகர ரோட், கட்டிடம் அமைந்துள்ள நிலஅளவையாளர் டபிள்யூ. என். எஸ். பெரேராவின் 1.8.1993 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2215 இல் காண்பிக்கப்பட்ட கோன்காவத்த காணியின் லொட் 1 இன் காணியின் எல்லைகள் - வடக்கு, கிழக்கு : ஆர். டி. கிரிகோரிஸ் உரிமையாளர்களின் காணி ; தென்கிழக்கு : லொட் 2 ; தென்மேற்கு : லொட் 3 (7 அடி ரோட்) மற்றும் வடமேற்கு : கப்புவாகர ரோட் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 24.60பே.) இக்காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் B206/378 இல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்படி பட்டகம தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் டபிள்யூ. என். எஸ். பெரேராவின் 01.08.1993 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2215 இல் காண்பிக்கப்பட்ட கோன்காவத்த காணியின் லொட் 2 இன் காணியின் எல்லைகள் - வடகிழக்கு : ஆர். டி. சிரிகோரிஸ் உரிமையாளர்களின் காணி ; தென்கிழக்கு : பி. டி. மேரி மார்க்கட் மற்றும் எம். எலிசபெத் அல்விஸ் காணிகள் ; தென்மேற்கு : பாதை ; வடமேற்கு : லொட் 3 (7 அடி ரோட்). இக்காணி விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 25பே.) இக்காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் B206/333 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய இரண்டு காணிகளும் மீள் அளந்து ஒன்றாக்கப்பட்டு வரைபடம் இலக்கம் 3907 இன்படி பின்வருமாறு சொல்லப்பட்டது:-

மேற்படி பட்டகம தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள கட்டிடம் இலக்கம் 207 (சரியாக கூறப்பட்டது. கட்டிடம் இலக்கம் 526) கபுவாகர ரோட் அமைந்துள்ள நிலஅளவையாளர் எம். டி. என். டி. பெரேராவின் 17.06.2005 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 3907 இல் காண்பிக்கப்பட்ட கோன்கஹாவத்த காணியின் பகுதிபடுத்திய லொட் A எல்லைகள் - வடகிழக்கு : ஆர். ஏ. டி. என். ருக்சான்தியின் காணி ; தென்கிழக்கு : பி. டி. எம். மாக்ரட் மற்றும் எம். இ. அல்விஸ் காணி ; தென்மேற்கு : ரோட் ; வடமேற்கு : கபுவிக்ர ரோட் விஸ்தீரணம்

(0ஏ. 1று. 8.20பே.) இக்காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் B601/130 இல் பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

7-499

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

2009.08.14 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

''பிரசித்த நொத்தாரிசு திரு. வசந்த அமரசேகர அத்தாட்சிப்படுத்திய 2004.02.09 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 9595 இன் பேரில் கந்தேகெதர, மஹாராச்சிமுல்ல என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி ரணதுங்க ஆரச்சில்லகே ரேணுகா மல்காந்தி மற்றும் திரு. ரணதுங்க ஆரச்சில்லகே பிரேமரத்ன ஆகியோரிடமிருந்து கூட்டாகவும் தனித்தனியாகவும் முதலும் 2009.06.09 வரை வட்டியும் ஒரு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து நான்கு ரூபா எண்பத்தேழு சதங்களும் (ரூ. 1,83,854.87) அத்துடன் ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரத்து முந்நூற்று முப்பது ரூபாங்களில் (ரூ. 1,35,330.00) ஆண்டுக்கு (28%) வீதத்தில் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேலே '1' இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஈட்டு முறி இல. 9595 ஆல் காப்பளித்து ஈடுவைக்கப்பட்ட சொத்தை விற்பதற்கு இல. 24, டொறிங்டன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளரக்ள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவு (297 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமைய இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பத்து உடுகஹ கோரளை கிழக்கில் கந்தேகெதரயில் அமைந்த வெரெல்லெ கால்ல முகலான என அழைக்கப்படும் காணியின் இறுதி கிராம வரைபடம் இல. 444 இல் துண்டு 412 என விபரித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு 387 உம் ; கிழக்கில் : துண்டு 411 உம் ; தெற்கில் : துண்டு 437 உம் ; மேற்கில் : துண்டு 413 எல்லைகளாகக் கொண்டு ஒன்று எட்டு ஒன்று (ஹெக். 0.181) விஸ்தீரணமுடையது. அத்துடன் குருநாகல் காணிப்பதிவகத்தில் எப்/ 36/ 4181/93 இல் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. அமரதுங்க தயாரித்த 2003, ஒற்றோபர் 15 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2397 இல் துண்டு 1 என தற்சமயம் விபரித்துள்ளதுடன் வடக்கில் : F. V. P. 444 இல் துண்டு 387 உம் ; கிழக்கில் : F. V. P. 444 இல் துண்டு 411 உம் ; தெற்கில் : பிரதேசசபை ரோட்டும் ; மேற்கில் : F. V. P. 444 இல் துண்டு 413 உம் எல்லைகளாகக்கொண்டு ஒரு றூட் முப்பத்தொரு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0று. 31.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. பீ. குணவர்த்தன,
முகாமையாளர்,

இலங்கை வங்கி,
அலவ்வ கிளை.

7-517

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

2009.10.15 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

''பிரசித்த நொத்தாரிசு எட்மன்ற் குலரத்ன அத்தாட்சிப்படுத்திய 2008.11.17 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 12909 இன் பேரில் இல. 82/ 1, பழைய பஸ் தரிப்பு நிலையம், கல்கமுவ என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மஹ எகொடகே சந்தும்மபால வலிசிங்ஹ கருணாதாச என்பவரிடமிருந்து முதலும் 2009.09.24 வரை வட்டியும் ஏழு இலட்சத்து பதினையாயிரத்து நாநூற்று மூன்று ரூபா முப்பத்துநான்கு சதங்களும் (ரூ. 7,15,403.34) அத்துடன் ஐந்து இலட்சத்து தொண்ணூறாயிரம் ரூபாவில் (ரூ. 5,90,000.00) ஆண்டுக்கு (27.50%) வீதத்தில் வட்டியும் 2009.09.25 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேலே '1' இல் குறிப்பிட்ட தொகையையும் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 4D, ரதகுருமாவத்த, சிலாபம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. டி. எல். ஜே. நிஸங்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமைய இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வன்னி ஹத்பற்று ஹதலிஸ்பஹ மேற்கு கோரளையில் கனஹன்கொட்டுவ கிராமத்தில் அமைந்த தல்கஹவத்த சியம்பலாகஹஹேன அல்லது கனஹனகொட்டுவ லந்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ.ஜீ. பந்துதிலக்க தயாரித்த 2007.09.01 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 15013/2007 இல் விபரித்த துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : கல்கமுவயிலிருந்து அஹட்டுவெவ வரை பிரதான ரோட்டும்;

கிழக்கில் : பிரேமவர்தன உரிமைகோரும் கடையுடன் காணியும் ; தெற்கில் : அஜித் மற்றும் குமாரிஹாமி உரிமைகோரும் காணியும் ; மேற்கில் : மில்றன் சில்வா உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு முப்பத்தாறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 36பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். (இது நிக்கவெரட்டிய காணிப் பதிவகத்தில் H 23/241 இல் பதிவு செய்யப்பட்டது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஆர். எல். திசாநாயக்க,
முகாமையாளர்,

இலங்கை வங்கி,
கல்கமுவ கிளை.

7-518

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

2009.11.12 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

''பிரசித்த நொத்தாரிசு திரு. றொமெல் விஜேவர்தன அத்தாட்சிப்படுத்திய 2006.12.22 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 10655 மற்றும் 2008.02.25 ஆந் திகதியளிட்ட ஈட்டு முறி இல. 11957 ஆகியவற்றின் பேரில் இல. D 149, நெளுந்தெனிய ரோட், அலவ்வத்த, அலவ்வ என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ராஜகருணா வணிகசேகர முதியான்சேலாகே அனுராஜ் வணிகசேகர என்பவரிடமிருந்து முதலும் 2009.10.19 வரை வட்டியும் இருபத்துமூன்று இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து நூற்று பன்னிரண்டு ரூபாய்களும் (ரூ. 23,32,112) அத்துடன் இருபது இலட்சம் ரூபாய்கள் (ரூ. 20,00,000.00) மீது 2009.10.20 ஆந் தொடக்கம் 2009.10.27 வரை ஆண்டுக்கு 24.50% வீதத்திலும் 2009.10.28 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு 15% வீதத்திலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேலே '1' இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஈட்டு முறி இல. 10655 மற்றும் 11957 ஆகியவற்றால் காப்பளித்து ஈடுவைக்கப்பட்ட சொத்தை விற்பதற்கு இல. 4 - D , ரதகுரு மாவத்தை, சிலாபம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. டீ. எல். ஜே. நிஸ்ஸங்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமைய இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

**அட்டவணை**

சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பெலிகல் கோரளை ஓத்தரபற்றுவில் வெடிகந்த ஓபாத்த கொடபலுவ மற்றும் ரண்வல கிராமங்களில் அமைந்ததும் 'அலவ்வ எஸ்டேட்' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். டபிள்யு. நந்தசேன தயாரித்த 2004.08.08 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1625 இல் துண்டு 01 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : சரத் மாப்பா குணரத்ன உரிமைகோரும் காணியும் ; கிழக்கில் : அலவ்வை எஸ்டேட் என அழைக்கப்படும் காணியும் ; தெற்கில் : அலவ்வ நெலுந்தெனியவிலிருந்து வீடுகளுக்குச் செல்லும் றோட்டும் ; மேற்கில் : சீ. டபிள்யு. ஜே. விதான மற்றும் எம். ஆர். சாதிமெனிகே உரிமைகோரும் காணிகளும் எல்லைகளாகக் கொண்டு பதினெட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18பே.) அல்லது 0.04552 ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம், நிலமனை மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட பிரிக்கப்பட்ட துண்டு 01 கீழே விபரித்த காணியின் மீளளவை ஆகும்:-

மேற்குறிப்பிட்ட வெடிகந்த, கொடபலுவ மற்றும் ஓப்பாத்த மற்றும் ரண்வல கிராமங்களில் அமைந்ததும் 'அலவ்வ வத்த' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. பீ. எம். வெபர் தயாரித்த 1991.03.03 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1611 இல் துண்டு 07 என அடையாளமிட்ட காணி வடக்கிழக்கில்: மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 08 உம் ; தென்கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 25 என விபரித்த பிரவேசப் பாதையும் ; தென்மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 04 உம் ; வடமேற்கில் : அதே காணியின் மீதிப்பாகமும் எல்லைகளாகக் கொண்டு பதினெட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18பே.) விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 25 என விபரித்த பாதைப் பிரவேசகத்தை உபயோகிப்பதற்கான உரிமையுமாகும். இது கேகாலை காணிப்பதிவகத்தில் E 1139/225 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. பீ. குணவர்த்தன,
முகாமையாளர்,

இலங்கை வங்கி,
அலவ்வ கிளை.

7-519

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(அளுத்கமை கிளை) - சின்ஹர பிரணீத் அநூஷ்கா டீ சில்வா

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையினால், 2010, யூன் மாதம் 03 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம்

ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

" சின்ஹர பிரனீத் அநூஷ்கா டீ சில்வா கடற்பாடு உடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில், பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பீ. வி. என். டபிள்யூ. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, மே 15 ஆந் திகதியிடப்பட்ட 1952 ஆம் இலக்க முறி மற்றும் 2008, திசெம்பர் 05 ஆந் திகதியிடப்பட்ட 2626 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2010, மே 19 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி, பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது பத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து நாநூற்று இருபது ரூபா நாற்பத்தாறு சதம் (ரூபா 19,74,420.46) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 1952 மற்றும் 2626 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 19,74,420.46 பணத்தொகையை 2010, மே 20 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுன தெற்கு, மெலவன் படவின் பேருவளை பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட தர்கா நகர் உப அலுவலக எல்லைக்கு உட்பட்ட மாலேவனவில் உள்ள மஹாமறதன குறுந்துவத்த தக்குணு கொட்டசவின் ஒன்று சேர்க்கப்பட்ட காணித்துண்டுகளான காணித்துண்டு 1 இன் காணித்துண்டு 7 இன் காணித்துண்டுகள் 1 மற்றும் 2 என அழைக்கப்படும் காணியுடனான உடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ. அதிகாரமினால் தயாரிக்கப்பட்ட 2006, பெப்புருவரி 1 ஆந் திகதியிடப்பட்ட 2739 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ என அடையாளம் இடப்படட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் காணித்துண்டு 6 ; கிழக்கு : டெம்பில் வீதி; தெற்கு : அதே காணியின் காணித்துண்டு 10; மேற்கு : அதே காணியின் காணித்துண்டுகள் 8 மற்றும் 5, அத்துடன் சொல்லப்பட்ட 2739 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், பதினொன்று தசம் மூன்று நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11.34பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

7-528/1

## ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(புதுக்கடை கிளை) - ஹேவா வல்பொல சுபசிங்க ரசிகா தீபானி

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையினால், 2009, யூலை மாதம் 23 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"ஹேவா வல்பொல சுபசிங்க ரசிகா தீபானி கடற்பாடு உடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில், கொழும்பு, பிரசித்த நொத்தாரிசு எம். பீ. எம். மொஹொட்டியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001, மாச்சு 21 ஆந் திகதியிடப்பட்ட 1443 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2009, சனவரி 28 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி, பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஆறு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து எழுநூற்று எழுபத்துநான்கு ரூபா முப்பது சதம் (ரூபா 6,86,774.30) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்ட 1443 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 6,86,774.30 பணத்தொகையை 2009, சனவரி 29 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏல விற்பனையாளர் எச். தலுவத்தவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (ஆனால் கொழும்பு பதிவு பிரிவிற்கு உட்பட்டது) அலுத்குறு கோரளை தெற்கு, ராகம்பற்று, வத்தளை பிரதேச சபையின் ஹெந்தளை உப அலுவலக பிரிவிற்கு உட்பட்ட ஹெந்தளயின் தயாவீதி 14/4 வரிமதிப்பீட்டிலக்கத்தை கொண்ட கடேவத்த கஜுகஹவத்த, கொரக்காகஹவத்த தவட்டகஹாவத்த மற்றும் ஹெடவக்ககஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டிடங்கள், மற்றும் எல்லாம் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரி. அமரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 1963, ஏப்பிறல் 30 ஆந் திகதியிடப்பட்ட 298 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு ஏ5 என அடையாமிடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு ஏ4 ; கிழக்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரி. அமரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 1960, யூன் 22 ஆந் திகதியிடப்பட்ட 227 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டுகள் பி1ஜ மற்றும் பி1எச் ; தெற்கு : காணித்துண்டு ஏ6 ; மேற்கு : காணித்துண்டு ஏ12 மற்றும் சொல்லப்பட்ட 298 ஆம் இலக்க

வரைபடத்திற்கு அமைவானதும் கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் பி 669/315 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட இருபது தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.5பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் மேற்சொல்லப்பட்ட 1443 ஆம் இலக்க அடமான முறிஇலக்கத்தின் இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவான பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

7-528/2

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பொரளை கிளை) - கந்தமுல்ல வடுகே உப்புல் நிஷாந்த

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையினால், 2009, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"கந்தமுல்ல வடுகே உப்புல் நிஷாந்த கடற்பாடு உடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில், கொழும்பு, பிரசித்த நொத்தாரிசு பீ. என். பி. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.01.25 ஆந் திகதியிடப்பட்ட 2806 மற்றும் 2808 ஆகிய இரு இலக்க முறிகள் என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2009, ஒற்றோபர் 29 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி, பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது நான்கு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து நூற்று அறுபத்துமூன்று ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூபா 4,48,163.43) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 2806 மற்றும் 2808 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 4,48,163.43 பணத்தொகையை 2009, ஒற்றோபர் 30 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏல விற்பனையாளர் பியரட்ன முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோறளை, மெதபற்றுவின் அறுக்வத்தயில் உள்ள அறுக்வத்த பிரதேசத்தின் மில்லிவா குறாப்பின் பகுதிக் காணி. உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. டி. ஜீ. வீரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 1993, ஒற்றோபர் 27 ஆந் திகதியிடப்பட்ட 1323 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 8, (உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. டி. ஜி. வீரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 1977, செத்தெம்பர் 2 ஆந் திகதியிடப்பட்ட 1285 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 மற்றும், 2 மீள நிலஅளவை செய்யப்பட்டது) என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : காணித்தண்டுகள் 7 மற்றும் 96 ; கிழக்கு : காணித்துண்டுகள் 96 மற்றும் 9 ; தெற்கு : காணித்துண்டு 9 மற்றும் 3311 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 4 ; மேற்கு : 3311 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 4 மற்றும் காணித்துண்டு 7 அத்துடன் சொல்லப்பட்ட 1323 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும். பதினைந்து தசம் நான்கு இரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15.42பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன், முன் சொல்லப்பட்ட 2806 மற்றும் 2808 ஆம் இலக்க முறிகளின் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

7-528/3

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(தம்புள்ளை கிளை) - அப்துல் ரஹீம் மொகமட் பசீர்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையினால், 2010, யூன் மாதம் 03 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"அப்துல் ரஹீம் மொகமட் பசீர் கடற்பாடு உடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில், மாத்தளை பிரசித்த நொத்தாரிசு ஆர். மணிவாணனினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, சனவரி 01 ஆந் திகதியிடப்பட்ட 2244 ஆம் இலக்க முறி மற்றும் குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். ஆர். ஜயவர்தனாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, யூலை 19 ஆந் திகதியிடப்பட்ட 6206 ஆம் இலக்க முறிகள் என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி, பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது அறுபது இலட்சத்து

அறுபதாயிரத்து நூற்று நாற்பத்திரண்டு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூபா 60,60,142.52) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 2244 மற்றும் 6206 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 60,60,142.52 பணத்தொகையை 2010, மே 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை மாநகர சபைக்கு உட்பட்ட களுதேவாலயத்தில் உள்ள மெகொட பில்லேவ, பெலிகஹாமுலகும்புற மறுபெயர் வத்தை மற்றும் மாலியத்தே சியம்பலகஹாமுல்ல வத்தை என்பன ஒரே ஆதனமாக்கப்பட்டது. உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. குமாரசாமியினால் தயாரிக்கப்பட்ட 17.03.1963 ஆந் திகதியிடப்பட்ட 3114 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 'H' என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : பாதையும் வயல் வெளியும் ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டு "F" ; தெற்கு : பாதை மற்றும் மாத்தளையில் இருந்து ரத்தோட்டை செல்லும் PWD வீதி; மேற்கு : பாதை. அத்துடன் மாத்தளை காணிப் பதிவகத்தில் A 70/197 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட இருபத்து இரண்டு தசம் இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 22.2பே.) விஸ்தீரணத்துடனான மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம்.

சொல்லப்பட்ட காணி அண்மையில் நிலஅளவை செய்யப்பட்டதற்கு அமைய, உரிமம் பெற்ற அளவையாளர் கே. ஓ. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 25.10.2002 ஆந் திகதியிடப்பட்ட 2185 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 01 ஆக தற்போது காட்டப்பட்டுள்ள மீகொட பில்லேவ, பெலிகஹாமுலகும்புர மறுபெயர் வத்தை மற்றும் மலியதே சியம்பலகஹாமுல வத்த என அழைக்கப்படும் காணி, முன் சொல்லப்பட்ட களுதிவல கிராமத்தில் தற்போது களுதிவல என காட்டப்பட்டுள்ளதன் எல்லைகள் - வடக்கு : எம். சீ. ஒழுங்கை ; கிழக்கு : 93 ஆம் வரிமதிப்பீட்டிலகக்த்தைக் கொண்டுள்ள வளவு ; தெற்கு : ரத்தோட்ட வீதி; மேற்கு : எம். சீ. ஒழுங்கை அத்துடன். மாத்தளை காணிப் பதிவகத்தில் A109/262 இல் பதிவு செய்யப்பட்ட இருபத்து ஒன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 21.5பே.) விஸ்தீரணத்துடனான மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

7-528/4

## ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(மருதானை கிளை) - உடதேவ ஆராச்சிகே டிகோல் சுகத் ரஞ்சன் அப்பு மற்றும் மஹாமலகே ஜயானி நிரோஷா தயானி பர்ணாண்டோ

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையினால், 2010, யூன் மாதம் 03 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"உடதேவ ஆராச்சிகே டிகோல் சுகத் ரஞ்சன் அப்பு மற்றும் மஹாமலகே ஜயானி நிரோஷா தயானி பர்ணாண்டோ கடற்பாடு உடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில், கொழும்பு, பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பேயிஸ்சினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, சனவரி 18 ஆந் திகதியிடப்பட்ட 146ஆம் இலக்க முறி, மற்றும் 2009, மே 6 ஆந் திகதியிடப்பட்ட 609 இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2010, மாச்சு 23 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி, பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது அறுபத்து ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நாற்பத்திரண்டு ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூபா 61,24,042.72) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 146 மற்றும் 609 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 61,24,042.72 பணத்தொகையை 2010, மாச்சு 24 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம்பெற்ற ஏல விற்பனையாளர் ஈ. எஸ். ராமநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

வடமேல் மாகாணம், (மாரவில பதிவுப் பிரிவிற்கு உட்பட்டது) புத்தளம் மாவட்டத்தின் பிற்றிகல் கோரளே தெற்கின் கமால் பற்றுவின் நைனாமடம கிழக்கில் உள்ள கஜுகஹாவத்த - பக்மெஹிவெயின்ன வத்த - கெண்டகஹாவத்த மற்றும் தம்மினகஹாவத்தவுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். ஜி. எஸ். சமரதுங்கவினால் தயாரிக்கப்பட் 21.10.1980 ஆந் திகதியிடப்பட்ட 1386 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 என அடையாளம் இடப் பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணி யின் எல்லைகள் - வடக்கு : வீதி ; கிழக்கு : காணித்துண்டு 4 ; தெற்கு: டபிள்யூ. எம். மாரியா கத்தரினா பர்ணாண்டோ மற்றும் டபிள்யூ. எம். சொலமினா பர்ணாண்டோ ஆகியோரின் காணி ; மேற்கு : காணித் துண்டு 2 (அகல வீதிக்கான ஒதுக்கீடு. அத்துடன் சொல்லப்பட்ட 1386 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், மாரவில மாவட்ட காணிப் பதிவகத்தில் ஜி 137/73 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

மேல் குறிப்பிடப்பட்ட ஆதனம், அண்மையில் நிலஅளவை செய்யப்பட்டது. உரிமம் பெற்ற நிலஅளவையாளர் வை. எம். ஆர். யாப்பாவினால் தயாரிக்கப்பட்ட 18.11.2003 ஆந் திகதியிடப்பட்ட 8953 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதற்கு இணங்க விபரங்கள் பின்வருமாறு :-

வடமேல் மாகாணம், (மாரவில பதிவுப் பிரிவிற்கு உட்பட்டது) புத்தளம் மாவட்டத்தின் பிற்றிகல் கோறளை தெற்கின் கமால் பற்றுவின் நைனாமடம கமால் பற்றுவவவின் உப அலுவலகத்தில் உள்ள கொஸ்கஹாவத்த, படிஞ்வெயின வத்த, கதுருகஹாவத்த மற்றும் தமின்னகஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட காணித்துண்டு 1, என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : வீதி (பி. ச.) ; கிழக்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். ஜி. எஸ். சமரதுங்கவினால் தயாரிக்கப்பட்ட 1386 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 4 ; தெற்கு : வீதி; மேற்கு : வீதி. அத்துடன் சொல்லப்பட்ட 8953 இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், முப்பத்து எட்டு தசம் ஐந்து பூஜ்யம் பேர்ச்சுகள்(0ஏ. 0றூ. 38.50பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

7-528/5

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0033 5001 0911 - எம். ஏ. வீ. சீ. எம். ஆரச்சி

2010, ஏப்பிறல் 27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசுவான கே. எல். எம். டீ. கித்சிரி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, செத்தெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 119 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில், கடமைப்பட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் முந்திகல ஆரச்சிகே வஜிர சித்ராநந்த முந்திகல ஆரச்சி என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 119 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் முப்பத்தாறு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து நாநூற்று நாற்பத்தொரு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 36,52,441.81) 2009, நவெம்பர் 16 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட முப்பத்தாறு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து நாநூற்று நாற்பத்தொரு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 36,52,441.81) 2009, நவெம்பர் 17 ஆந் திகதி முதல் இல. 119 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் வரை முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தொரு வீதமும் (21%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 119 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

#### அட்டவணை

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்ட கோரளே உட தெற்கு பத்து, அமுத்தகொடயில் கிராமத்தில் அமைந்த "கட்டவலஹேன" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். பீ. எஸ். ராஜபக்ஷ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, ஓகத்து 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 2650 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : மயானம் ; கிழக்கிற்கு : இல. 2794 எனும் வரைபடத்தில் லொட்கள் 1 மற்றும் 8 ; தெற்கிற்கு : வீதி மற்றும் ; மேற்கிற்கு : இல. 2794 எனும் வரைபடத்தில் லொட் 10. இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2650 எனும் வரைபடத்திற்கு அமைவாக இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 485/269 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-542/1

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0024 1000 3085 - எக்குரோபெக் என்டர்பிரைசர்ஸ் (பிறைவேட்) லிமிடெட்

2009, ஒற்றோபர் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசுகளான எஃப்.

பெர்ணாண்டோபிள்ளே என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, யூன் 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 6537 மற்றும் 2006, ஒற்றோபர் 03 ஆந் திகதியிடப்பட்டஇல. 8762 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டார் என்ற வகையில், கடமைப்பட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனி சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்டு தனது பதிவு அலுவலகத்தை கம்பஹா மாவட்டத்தில் கொண்டுள்ள, பெயர் மற்றும் வடிவில் "எக்குரோபெக் என்டர்பிரைசர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்' என்ற மகுடத்தின் கீழ் இயங்கும் கம்பனி, மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட ஈட்டுமுறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் ஐம்பத்தாறு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து ஐநூற்று எழுபத்துமூன்று ரூபா ஐம்பது சதம் (ரூ. 56,34,573.50) 2009 ஓகத்து 14 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஐம்பத்தாறு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து ஐநூற்று எழுபத்துமூன்று ரூபா ஐம்பது சதம் (ரூ. 56,34,573.50) 2009, ஓகத்து 15 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 6537 மற்றும் 8762 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் வரை இருபத்து நான்கு இலட்சத்து முப்பத்தையாயிரத்து நூற்று எழுபத்திரண்டு ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 24,35,172.26) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு மூன்று வீதம் (3%) சராசரிக்கு மேலான கடன் வழங்கும் திட்டத்திற்கு அமைவாக குறைந்த பட்ச வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்நான்கு வீதமும் (14%) பதினைந்து இலட்சத்து பதினாறாயிரத்து எண்ணூற்று எழுபத்தேழு ரூபா நாற்பது சதம் (ரூ. 15,16,877.40) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு தசம் ஐந்து வீதம் (18.5%) மேலும் ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 5,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக பத்தொன்பது வீதம் (19% வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 6537 மற்றும் 8762 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவுப்பிரிவிற்குள் பிட்டிகல் கோரளை தெற்கில் கம்மல் பத்துவின் தம்பரவிலையில் அமைந்த கெட்டபெலகாஹாவத்த, திவுலகாஹாவத்த காட்டகாஹாவத்த மற்றும் போகாஹாவத்த தற்போது ஒரே காணியாக அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜே. எம். ஜீ. டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, நவெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 3726 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : டபிள்யூ. சைமன் சில்வாவினது காணி ; கிழக்கிற்கு : ஜஸ்டின் பெர்ணாண்டோவினது வாரிசுகள் உரிமை கோரும் காணி; தெற்கிற்கு : வீதி (அதிவேகத் தெரு) மற்றும் ; மேற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். ஏ. கொஸ்தா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1980, திசெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 2926 எனும் வரைபடத்தில் லொட் 3 என குறிப்பிடப்பட்ட எஞ்சிய பகுதி. இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இரண்டு றூட்கள் மற்றும் இருபது பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 20பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 115/164 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-542/2

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல.: 0002 5005 4947 - ஜீ. எஸ். ஜீ. எல். வசந்த மற்றும் கே. எச். ஜீ. பீ. குமாரிஹாமி

2005, மாச்சு 24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.-

"கடப்பாடுடையவர்களான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, வத்தளை, என்டேரமுல்லை, சென். ஜுட் மாவத்தை, இல. 61/2 ஐச் சேர்ந்த குக்குலலஹின்னெ கெதர பிரியன்தி குமாரிஹாமி மற்றும் கொழும்பு 11, 4 ஆம் குறுக்குத் தெரு, இல. 68 ஐச் சேர்ந்த கால்லே சியம்பலகஹயட்ட கெதர லெஸ்லி வசந்த அத்துடன் ஈடுவைத்தவரான மேற்கூறப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, வத்தளை, என்டேரமுல்லை, சென். ஜுட் மாவத்தை, இல. 61/2 ஐச் சேர்ந்த சொல்லப்பட்ட குக்குல்லஹின்னெ கெதர பிரியன்தி குமாரிஹாமி ஆகியார் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. எஸ். பீ. டபிள்யூ. ஜயவீர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2002, திசெம்பர் 26 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 2093 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும்;

அத்துடன் கடப்பாடுடையவர்களான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, வத்தளை, என்டேரமுல்லை, சென். ஜுட் வீதி, இல. 61/2 ஐச் சேர்ந்த குக்குலலஹின்னெ கெதர பிரியன்தி குமாரிஹாமி மற்றும் கால்லே சியம்பலகஹயட்ட கெதர லெஸ்லி வசந்த ஆகிய இருவரும் அத்துடன் மேற்கூறப்பட்ட வத்தளை, என்டேரமுல்லை, சென். ஜுட் வீதி, இல. 61/2 ஐச் சேர்ந்த சொல்லப்பட்ட கால்லே சியம்பலகஹயட்ட கெதர லெஸ்லி வசந்த ஆகியோர் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. எஸ். பீ. டபிள்யூ. ஜயவீர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2002, திசெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 2098 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும்;

அத்துடன் 2005, சனவரி 4 ஆந் திகதியன்றுள்ளவாறு வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு சொல்லப்பட்ட முறி மூலம் நாற்பத்தெட்டு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து அறுநூற்று

தொண்ணூற்று ஐந்து ரூபா நாற்பத்தைந்து சதம் மட்டும் (ரூபா 48,24,695.45) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாலும், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது, சொல்லப்பட்ட தொகை நாற்பத்தெட்டு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா நாற்பத்தைந்து சதம் மட்டும் (ரூபா 48,24,695.45) ஐ மேலும் 2005, சனவரி 5 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை முப்பத்தைந்து இலட்சம் மட்டும் (ரூ. 35,00,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினெட்டு சதவீத (18%) வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இலக்கங்கள 2093 மற்றும் 2098 ஐக் கொண்ட சொல்லப்பட்ட முறிகள் மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முறையே முழுமையாக விவரிக்கப்பட் டுள்ளதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் டன்ஸ்டன் கெலார்ட் அவர்களால் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்று, மஹர பிரதேச சபை எல்லைகளுக்குள், பின்னமெத கிராமத்தில் அமைந்துள்ளதும் ''ஹெதவகஹவத்தை'' என்ற ''மில்லகஹவத்தை' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. எச். பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, யூன் 3 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 6130 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்டு காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், மண், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. இதன் எல்லைகளாவன- வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். பெர்ணாண்டோ அவர்ளகால் தயாரிக்கப்பட்டு 1979, பெப்புருவரி 8 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3588 இல் துண்டு 3 (வீதி) மற்றும் உத்தரபெற்ற நிலஅளவையாளர் கே. ஜீ. எச். பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1979, ஒற்றோபர் 13 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1420 இல் துண்டு 06/02; கிழக்கு : துண்டு 2 ; தெற்கு : டி. டபிள்யூ. விலத்கமுவவின் ஹெதவக்கஹாவத்தை ; மேற்கு : பீ. டி. வில்பேர்ட்டிற்கு சொந்தமான இதே காணியின் துண்டு 1 மற்றும் மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 3588 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 1 இன் எஞ்சிய பாகம். இது, பத்து தசம் ஆறு எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10.68பே.) விஸ்தீரணமுடையது. கம்பஹா காணிப் பதிவகத்தில் சீ 473/252 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலும் மீதும் வழியேயுமான வழியுரிமையடன் சேர்த்து -

